சாராம்சம்: இனிய குழந்தைகளே, பாபாவே அநாதியான மூலிகை மருத்துவர். அவர் ஒரு மகா மந்திரத்தின் மூலம் உங்களுடைய துக்கங்கள் அனைத்தையும் நீக்குகிறார்.

கேள்வி: மாயை ஏன் உங்களுக்கு அடிக்கடி தடைகளை ஏற்படுத்துகிறாள்?

பதில்: 1) மாயையின் அனைத்து வாடிக்கையாளர்களிலும் நீங்களே மிகவும் சிறந்தவர்கள் என்பதாலாகும். தன்னுடைய வாடிக்கையாளரான உங்களை அவள் இழப்பதைக் கண்டதும், உங்கள் வழியில் அவள் தடைகளை ஏற்படுத்துகிறாள். 2) அநாதியான மூலிகை மருத்துவர் உங்களுக்கு மருந்தைக் கொடுத்ததும், மாயையின் அனைத்து நோய்களும் வெளிப்படுகின்றன. ஆகவே நீங்கள் தடைகளையிட்டு பயப்படக்கூடாது. மாயை, 'மன்மனாபவ' என்ற மந்திரத்திலிருந்து தூர ஓடிவிடுவாள்.

ஓம் சாந்தி. தந்தை இங்கு அமர்ந்திருந்து, குழந்தைகளாகிய உங்களுக்கு விளங்கப்படுத்துகிறார். விரக்தியடைந்த மக்கள் சதா மன அமைதியை வேண்டுகின்றார்கள்! அவர்களும் "ஓம் சாந்தி" என்று ஒவ்வொரு நாளும் கூறுகிறார்கள். ஆனால், அவர்கள் அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாததால், தொடர்ந்தும் அமைதியை வேண்டுகின்றார்கள். அவர்கள் 'நான் ஓர் ஆத்மா' என்றும் கூறுகின்றார்கள். அதன் அர்த்தம்: 'நான் மௌனமானவர்' என்பதாகும். உங்கள் ஆதி தர்மம் மௌனமாயின், அதனை நீங்கள் ஏன் வேண்டுகிறீர்கள்? இந்த அமைதியின் அர்த்தத்தை அவர்கள் புரிந்து கொள்ளாததால், அவர்கள் அதனைத் தொடர்ந்தும் கேட்கிறார்கள். இது இராவணனின் இராச்சியம் என்பதை நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். ஆனால் பொதுவாக முழு உலகினதும் எதிரி இராவணனே என்பதையும், குறிப்பாகப் பாரதத்தின் எதிரி என்பதையும் நீங்கள் புரிந்து கொள்வதில்லை. இதனாலேயே அவர்கள் தொடர்ந்தும் இராவணனின் கொடும்பாவியை எரிக்கிறார்கள். ஒவ்வொரு வருடமும் கொடும்பாவி எரிக்கப்படுகின்ற, அத்தகையதொரு மனிதனாவது இருக்கிறாரா? அவனே உங்களின் மிகப் பெரிய எதிரி என்பதால், அவர்கள் பிறவி பிறவியாக, கல்பம் கல்பமாக அவனுடைய கொடும்பாவியை எரிக்கிறார்கள். அனைவரும் ஐந்து விகாரங்களில் அகப்பட்டிருக்கிறார்கள். அனைவரின் பிறப்பும் சீரழிவின் மூலமே இடம்பெறுகிறது. ஆகவே இது இராவணனின் இராச்சியமாகும். இந்த நேரத்தில் அளவற்ற துன்பம் உள்ளது. இந்தத் துன்பத்திற்கு யார் பொறுப்பு? இராவணன்! துன்பத்திற்கான காரணம் எவருக்கும் தெரியாது. இந்த இராச்சியம் இராவணனுக்கு உரியது. அவனே அனைவரினதும் மிகப்பெரிய எதிரியாவான். மக்கள் ஒவ்வொரு வருடமும் அவனது கொடும்பாவியைச் செய்து. எரிக்கிறார்கள். நாளுக்கு நாள் அவர்கள் கொடும்பாவியைப் பெரிதாக்குகிறார்கள். துன்பமும் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. பல சிறந்த சாதுக்கள், புனிதர்கள், மகாத்மாக்கள், ஆட்சியாளர்கள் போன்றோருக்கு தாங்கள் ஒவ்வொரு வருடமும் எரிக்கின்ற இராவணனே, தங்கள் எதிரி என்பது தெரியாது. உண்மையில் அவர்கள் இந்த விழாவை அதிகளவு சந்தோஷத்துடன் கொண்டாடுகிறார்கள். இராவணன் மரணித்துவிட்டான் என்றும், தாங்கள்

இலங்கையின் (இராவணனின் இராச்சியம்) அதிபதிகள் ஆகுவதாகவும் அவர்கள் எண்ணுகிறார்கள். எவ்வாறாயினும், அவர்கள் அதிபதிகள் ஆகுவதில்லை. அவர்கள் அந்தப் பண்டிகையை பெருந்தொகையான பணத்தைச் செலவழித்துக் கொண்டாடுகிறார்கள். தந்தை கூறுகிறார்: நான் உங்களுக்கு எண்ணற்ற செல்வத்தைக் கொடுத்தேன். அவை அனைத்தையும் நீங்கள் எங்கே தொலைத்தீர்கள்? தசேராவின்போது (இராவணனை எரிக்கின்ற) அவர்கள் நூறாயிரக் கணக்கான ரூபாய்களைச் செலவழிக்கிறார்கள். இராவணன் கொல்லப்பட்டு, பின்னர் இலங்கை சூறையாடப்பட்டதாகக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் தாங்கள் ஏன் இராவணனை எரிக்கிறார்கள் என்பதை எவருமே புரிந்துகொள்ளவில்லை. இந்த நேரத்தில் அனைவரும் விகாரங்களின் சிறையில் உள்ளார்கள். தாங்கள் மிகவும் சந்தோஷமற்றவர்களாக ஆகுவதால், அரைக் கல்பத்திற்கு இராவணனை அவர்கள் எரிக்கிறார்கள். இராவணனின் இராச்சியத்தில் தாங்கள் மிகவும் சந்தோஷமற்றவர்கள் ஆகிவிட்டார்கள் என்பதை அவர்கள் புரிந்துகொள்கிறார்கள். ஆனால் சத்திய யுகத்தில் ஐந்து விகாரங்களும் இருப்பதில்லை என்பதை அவர்கள் புரிந்துகொள்வதில்லை. இராவணனை எரிப்பது போன்று எதுவும் அங்கு இடம் பெறுவதில்லை. எப்போது அந்தப் பண்டிகைகளைக் கொண்டாட ஆரம்பித்தார்கள் என்று நீங்கள் அவர்களைக் கேட்டால், தொன்று தொட்டு அது தொடர்கிறது என்று அவர்கள் பதிலளிக்கிறார்கள். ரக்ஷா பந்தன் எப்பொழுது ஆரம்பமாகியது என்று அவர்களைக் கேட்டால், தொன்று தொட்டு அது தொடர்கிறது என்று அவர்கள் பதிலளிக்கிறார்கள். ஆகவே இவ்விடயங்கள் அனைத்தும் புரிந்துகொள்ளப்பட வேண்டியவையாகும். மக்களின் புத்திக்கு என்ன நேர்ந்தது? அவர்கள் மிருகங்கள் போன்றுமில்லை, மனிதர்கள் போன்றுமில்லை. அவர்கள் எவ்விதப் பயனும் அற்றவர்கள்! அவர்களுக்கு சுவர்க்கத்தையேனும் தெரியாது. கடவுள் இந்த உலகைப் படைத்தார் என்று அவர்கள் நினைத்தாலும், துன்பம் வரும்போது அவர்கள் கடவுளை நினைவு செய்கிறார்கள். “ஓ கடவுளே, எங்களை இந்தத் துன்பத்திலிருந்து விடுவியுங்கள்!” என்று அவர்கள் கூறுகிறார்கள். எவ்வாறாயினும், கலியுகத்தில் சந்தோஷம் இருக்காது. நிச்சயமாக அவர்கள் துன்பத்தை அனுபவம் செய்யவேண்டும். அவர்கள் ஏணியில் கீழிறங்கிவர வேண்டும். புதிய உலகின் ஆரம்பத்திலிருந்து, பழைய உலகின் இறுதிவரை அனைத்து இரகசியங்களையும் தந்தை விளங்கப்படுத்துகிறார். இந்தத் துன்பங்கள் அனைத்தையும் குணப்படுத்துவதற்கு ஒரேயொரு மருந்தே உள்ளது என்று அவர் குழந்தைகளாகிய உங்களிடம் வரும்போது கூறுகிறார். அவரே அநாதியான மூலிகை மருத்துவர். அவர் உங்களை 21 பிறவிகளுக்கு அனைத்துத் துன்பங்களிலுமிருந்தும் விடுவிக்கிறார். இங்கு மூலிகை மருத்துவர்களும் நோய் வாய்ப்படுகிறார்கள். அந்த ஒருவரே அநாதியான மூலிகை மருத்துவர். அங்கு அளவற்ற துன்பமும், அளவற்ற சந்தோஷமும் உள்ளது என்பதை நீங்களும் புரிந்துகொள்கிறீர்கள். தந்தை உங்களுக்கு அளவற்ற சந்தோஷத்தைக் கொடுக்கிறார். அங்கு துன்பத்தின் பெயரோ அல்லது சுவடோ இருக்காது. இந்த மருந்து சந்தோஷமாகுவதற்கு மாத்திரமே. என்னை நினைவு செய்யுங்கள். நீங்கள் தூய்மையாகவும், சதோபிரதானாகவும் ஆகுவீர்கள். உங்கள் துன்பம் அனைத்தும் அகற்றப்பட்டுவிடும். பின்னர், சந்தோஷமேயன்றி, வேறு எதுவும் இருக்காது. தந்தையே துன்பத்தை அகற்றுபவரும், சந்தோஷத்தை அருள்பவரும் என்று நினைவுகூரப்படுகிறது. அவர் அரைக் கல்பத்திற்கு உங்கள் துன்பங்கள் அனைத்தையும் அகற்றுகிறார். நீங்கள் உங்களை ஓர் ஆத்மாவாகக்

கருதி, தந்தையை நினைவு செய்யவேண்டும். இது ஆத்மாவையும், சரீரத்தைப் பற்றியதொரு விளையாட்டாகும். அசரீரியான ஆத்மா அழிவற்றவர். பௌதீக சரீரம் அழியக்கூடியது. முழு நாடகமும் இதனைப் பற்றியதாகும். தந்தை கூறுகிறார்: உங்கள் சொந்தச் சரீரம் உட்பட, சரீர உறவுமுறைகள் அனைத்தையும் மறந்துவிடுங்கள். உங்கள் குடும்பத்துடன் வாழும்போதும், நீங்கள் இப்பொழுது வீட்டிற்குத் திரும்பவேண்டும் என்ற உணர்வைக் கொண்டிருங்கள். தூய்மையற்றவர்களால் வீட்டிற்குத் திரும்ப முடியாது. ஆகவே, சதா என்னை மாத்திரம் நினைவு செய்யுங்கள். அப்பொழுது நீங்கள் சதோபிரதான் ஆகுவீர்கள். தந்தையிடமே மருந்து உள்ளது. மாயை நிச்சயமாக உங்கள் பாதையில் தடைகளை ஏற்படுத்துவாள் என்று நானும் உங்களுக்குக் கூறுகிறேன். நீங்கள் இராவணனின் வாடிக்கையாளர்கள். அவள் உங்கள் வாடிக்கையை இழந்துவிடுவதால், நிச்சயமாக அவள் நம்பிக்கையற்றுவிடுவாள். தந்தை விளங்கப்படுத்துகிறார்: இந்த ஞானம் உங்கள் கல்வியாகும். இது மருந்தல்ல. நினைவு யாத்திரையே உங்கள் மருந்தாகும். சதா என்னை நினைவு செய்வதை நீங்கள் தொடர்ந்தும் முயற்சி எடுத்தால், இந்த ஒரேயொரு மருந்தை மாத்திரம் எடுப்பதன் மூலம், உங்கள் துன்பங்கள் அனைத்தும் அகற்றப்பட்டுவிடும். பக்தி மார்க்கத்தில் பலர் ஏதோவொரு மந்திரத்தை அல்லது இராம நாமத்தை தொடர்ச்சியாக உச்சரிக்கிறார்கள். அவர்களின் குரு அவர்களுக்கு ஒரு மந்திரத்தைக் கொடுத்து, ஒரு நாளில் குறிப்பிட்ட தடவைகள் அதனை உச்சரிக்குமாறு கூறுவார். இது இராமநாமத்தை உச்சரித்து, மாலையை உருட்டுவது எனப்படும். அது இராம நாமத்தை அர்ப்பணித்தல் எனப்படும். அவ்வாறு பல நிறுவனங்கள் உள்ளன. அவர்கள் தொடர்ந்தும் “இராமா, இராமா” என்று உச்சரிக்கிறார்கள். அவர்கள் அதில் ஈடுபட்டு இருப்பதால், அவர்கள் சண்டை போன்றவற்றைச் செய்யமாட்டார்கள். இடைநடுவே யாராவது அவர்களுடன் பேசினாலும், அவர்கள் பதில் கூற மாட்டார்கள். எவ்வாறாயினும் வெகு சிலரே அவ்வாறு செய்கிறார்கள். இங்கு இராம நாமத்தைப் பெரிதாக உச்சரிக்க வேண்டிய தேவை இல்லை என்று தந்தை கூறுகிறார். இங்கு நீங்கள் சத்தமின்றி உச்சரிக்கிறீர்கள். தொடர்ந்தும் தந்தையை நினைவு செய்யுங்கள். தந்தை கூறுகிறார்: நான் இராமர் அல்ல. இராமர் திரேதா யுகத்திற்கு உரியவர். அந்த இராச்சியத்தைக் கொண்டிருந்த இராமர் அவரே. நீங்கள் அவரது பெயரை உச்சரிக்க வேண்டியதில்லை. தந்தை விளங்கப்படுத்துகிறார்: பக்தி மார்க்கத்தில் அவை அனைத்தையும் உச்சரித்து, பூஜைகள் செய்தபோதும் நீங்கள் தொடர்ந்தும் ஏணியிலிருந்து கீழிறங்கினீர்கள். ஏனெனில் அவை அனைத்தும் அதர்மமாகும். தந்தை ஒருவரே தர்மமானவர். அவர் இங்கு அமர்ந்திருந்து, குழந்தைகளாகிய உங்களுக்கு விளங்கப்படுத்துகிறார். இது ஒரு புதிர் விளையாட்டாகும். நீங்கள் எவரிடமிருந்து எல்லையற்ற ஆஸ்தியைப் பெறுகின்றீர்களோ, அந்த ஒரேயொருவரான தந்தையை நீங்கள் நினைவு செய்யும்போது, உங்கள் முகம் தொடர்ந்து பிரகாசமடைகின்றது. உங்கள் முகம் சந்தோஷத்தால் பூரிப்படைவதுடன், உங்கள் உதட்டில் சதா புன்னகை தவழும். தந்தையை நினைவு செய்வதன் மூலம் நீங்கள் எவ்வாறு ஆகுவீர்கள் என்பதைப் புரிந்துகொள்கிறீர்கள். அரைக் கல்பத்திற்கு உங்கள் துன்பங்கள் அனைத்தும் அகற்றப்படும். பாபா உங்கள் மீது கருணை காட்டுவார் என்பதல்ல. இல்லை. எந்தளவுக்கு அதிகமாக நீங்கள் பாபாவை நினைவு செய்கிறீர்களோ, அந்தளவிற்கு நீங்கள் சதோபிரதான் ஆகுவீர்கள். உலக அதிபதிகளான

இலக்ஷ்மியும், நாராயணனும் அத்தகைய மலர்ச்சியான முகங்களைக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அவர்களைப் போன்று ஆகவேண்டும். நீங்கள் எல்லையற்ற தந்தையை நினைவு செய்யும்போது, மீண்டும் ஒருமுறை உலக அதிபதிகள் ஆகுகிறீர்கள் என்பதை அறிந்து கொள்வதால் உள்ளார்த்தமாகச் சந்தோஷம் இருக்கும். ஆத்மாக்களாகிய நீங்கள் பின்னர் சந்தோஷத்திற்கான சம்ஸ்காரத்தை உங்களுடன் எடுத்துச் செல்கிறீர்கள். பின்னர் இந்தச் சம்ஸ்காரங்கள் படிப்படியாகக் குறைவடைகின்றன. இந்த நேரத்தில் மாயை உங்களுக்கு அதிகளவு தொந்தரவு கொடுக்கிறாள். நீங்கள் என்னை நினைவு செய்வதை மறக்கச் செய்வதற்கு, மாயை முயற்சிக்கிறாள். உங்களால் சதா மலர்ச்சியான முகத்தைக் கொண்டிருக்க முடியாதிருக்கும். நீங்கள் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் மூச்சுத் திணறுவீர்கள். மக்கள் நோய்வாய்ப்படும்போது சிவபாபாவை நினைவு செய்யுமாறு அவர்களுக்குக் கூறப்படுகிறது. ஆனால் சிவபாபா யார் என்பது எவருக்கும் தெரியாது. ஆகவே எதனைப் புரிந்துகொண்டு அவர்கள் அவரை நினைவு செய்வார்கள்? அவர்கள் ஏன் அவரை நினைவு செய்யவேண்டும்? தந்தையை நினைவு செய்வதன் மூலம் நீங்கள் தமோபிரதானிலிருந்து சதோபிரதானாக மாறுகிறீர்கள் என்பதைக் குழந்தைகளாகிய நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள். தேவர்கள் சதோபிரதானாக இருந்தார்கள். அது தேவலோகம் என்று அழைக்கப்படுகிறது. அது மனித உலகம் என்று அழைக்கப்படுவதில்லை. 'மனிதர்கள்' என்ற பதம் அங்கு உபயோகிக்கப்படுவதில்லை. "இன்ன இன்னார் தேவர்கள்" என்று கூறப்படுகிறது. அது தேவலோகம். இது மனித உலகம். இவ்விடயங்கள் அனைத்தும் புரிந்துகொள்ளப்பட வேண்டும். தந்தை மாத்திரமே இவ்விடயங்களை விளங்கப்படுத்துகிறார். அவர் ஞானக்கடல் எனப்படுகிறார். தந்தை தொடர்ந்தும் பல வகையான விளக்கங்களைக் கொடுக்கிறார். எவ்வாறாயினும் இறுதியில் அவர் மகா மந்திரத்தைக் கொடுக்கிறார். தந்தையை நினைவு செய்வதன் மூலம் நீங்கள் சதோபிரதான் ஆகுவதுடன், உங்கள் துன்பங்கள் அனைத்தும் அகற்றப்படும். ஒரு கல்பத்திற்கு முன்னர் நீங்கள் தேவர்களாக இருந்தீர்கள். உங்கள் குணங்களும் தேவர்களைப் போன்று இருந்தது. சத்திய யுகத்தில் உள்ளவர்கள் தவறான எவற்றையும் எவரும் கூறமாட்டார்கள். அவர்கள் அத்தகைய செயல்கள் எதனையும் செய்ய மாட்டார்கள். அது தேவலோகம். இது மனித உலகம். இதில் வேறுபாடு உள்ளது. தந்தை இங்கே அமர்ந்திருந்து, இதனை விளங்கப்படுத்துகிறார். நூறாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் தேவலோகம் இருந்ததாக மக்கள் நினைக்கிறார்கள். இப்போது எவரையும் தேவர் என்று அழைக்கமுடியாது. தேவர்கள் தூய்மையானவர்கள், சுத்தமானவர்கள். தேவர்கள் மகாத்மாக்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள். சாதாரண மனிதர்களுக்கு ஒருபோதும் இந்தப் பட்டம் வழங்கப்படுவதில்லை. இது இராவணனின் உலகமாகும். இராவணனே உங்களின் மிகப் பெரிய எதிரியாவான். அவனைப்போன்று வேறு எந்த எதிரியுமில்லை. நீங்கள் ஒவ்வொரு வருடமும் இராவணனின் கொடும்பாவியை எரிக்கிறீர்கள். ஆனால் அவன் யார் என்று எவருக்கும் தெரியாது. அவன் ஒரு மனிதனல்ல. அவன் ஐந்து விகாரங்களையும் பிரதிநிதிப்படுத்துகிறான். அதனாலேயே, இது இராவணனின் இராச்சியம் என்று அழைக்கப்படுகிறது. இது ஐந்து விகாரங்களினதும் இராச்சியமாகும். ஒவ்வொருவரிடமும் இந்த ஐந்து விகாரங்களும் உள்ளன. சீரழிவைப் பற்றியும், ஜீவன் முத்தியைப் பற்றியதுமான இந்த நாடகம் ஏற்கெனவே

நிச்சயிக்கப்பட்டதாகும். ஜீவன் முக்திக்கான நேரம் போன்றவை பற்றித் தந்தை உங்களுக்கு விளங்கப்படுத்தியுள்ளார். சீரழிவைப் பற்றியும் அவர் உங்களுக்கு விளங்கப்படுத்தியுள்ளார். நீங்களே அதி உயரத்திற்கு ஏறுபவர்களும், நீங்களே கீழே விழுபவர்களும் ஆவீர்கள். சிவனின் பிறந்தநாளும், இராவணனின் பிறந்தநாளுமே பாரதத்தில் கொண்டாடப்படுகின்றன. அரைக் கல்பத்திற்கு அது இலக்ஷ்மி நாராயணனினதும், இராமர், சீதையினதும் இராச்சியமாகிய தேவலோகமாகும். குழந்தைகளாகிய உங்களுக்கு இப்போது ஒவ்வொருவருடைய வாழ்க்கைச் சரிதையும் தெரியும். அனைத்துப் புகழும் உங்களுக்கே உரியவை. நீங்களே நவராத்திரி விழாவின்போது (ஒன்பது இரவுகள்) பூஜிக்கப்பட்டீர்கள். நீங்களே சுவர்க்க ஸ்தாபனையைக் கொண்டுவருபவர்கள். நீங்கள் ஸ்ரீமத்தைப் பின்பற்றி, உலகை மாற்றுகிறீர்கள். ஆகவே நீங்கள் ஸ்ரீமத்தை முற்றாகப் பின்பற்றவேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் வரிசைக்கிரமமாகத் தொடர்ந்தும் முயற்சி செய்கிறீர்கள். சுவர்க்கம் தொடர்ந்து ஸ்தாபிக்கப்படுகிறது. இதில் சண்டையிடுவது போன்ற கேள்விக்கே இடமில்லை. இந்த மிக மங்களகரமான சங்கம யுகம் முற்றிலும் வேறானது என்பதை இப்போது நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள். பழைய உலகின் இறுதியும், புதிய உலகின் ஆரம்பமும் இதுவாகும். பழைய உலகை மாற்றுவதற்குத் தந்தை வருகிறார். அவர் உங்களுக்கு அதிகளவு விளங்கப்படுத்துகிறார். ஆனால் உங்களில் பலர் மறந்துவிடுகிறீர்கள். விரிவுரையாற்றிய பின்னர் அவர்களுக்கு அனைத்தும் ஞாபகம் வந்து, தாங்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய கருத்துக்களை எண்ணிப்பார்க்கிறார்கள். முன்னைய கல்பத்தில் எவ்வாறு இடம்பெற்றதோ, அவ்வாறே சுவர்க்கம் ஸ்தாபிப்பதும் இடம்பெறும். நீங்கள் முன்னர் எந்த அந்தஸ்தைப் பெற்றீர்களோ, அதே அந்தஸ்தையே நீங்கள் ஒவ்வொருவரும் பெறுவீர்கள். நீங்கள் அனைவரும் சமமான அந்தஸ்தைப் பெற மாட்டீர்கள். அங்கே உயர்ந்த அந்தஸ்தைப் பெறுபவர்களும், குறைவான அந்தஸ்தைப் பெறுபவர்களும் இருக்கிறார்கள். விசேடமான குழந்தைகள் மேலும் முன்னேறிச் செல்லும்போது, யார் செல்வந்தர்களுக்குப் பணிப்பெண்ணாக இருப்பார்கள், யார் அரச குடும்பத்திற்குப் பணிப்பெண்ணாக இருப்பார்கள், யார் மிகவும் செல்வந்தர்களாக இருந்து, இடையிடையே அரச குடும்பத்தினால் அழைக்கப்படுவார்கள் என்பதை அவர்கள் அதிகளவு உணர்ந்துகொள்வார்கள். அவர்கள் அனைவரையும் அழைக்க மாட்டார்கள். அனைவராலும் அவர்களின் முகங்களையேனும் பார்க்க முடியாது. தந்தை பிரம்மாவின் வாய் மூலம் விளங்கப்படுத்துகிறார். அனைவராலும் அவரை நேரடியாகப் பார்க்க முடியாது. நீங்கள் தூய்மையாகி, இப்போது நேரடியாக பாபாவின் முன்னால் வந்திருக்கிறீர்கள். என்ன நடக்கின்றதென்றால், தூய்மையற்றவர்களும் இங்கு வந்து அமர்ந்து சிறிதளவையேனும் செவிமடுப்பதால், அவர்களும் தேவர்கள் ஆகுகிறார்கள் என்பதே இங்கு நிகழ்கின்றது. அவர்கள் சிறிதளவைச் செவிமடுத்தாலும் அதனால் சிறிது பலனுண்டு. அவர்கள் முன்னர் செவிமடுக்கவில்லையென்றால், இங்கு வந்திருக்க மாட்டார்கள். ஆகவே தந்தை கூறுகின்ற முக்கியமான விடயம் 'மன்மனாபவ' ஆகும். இந்த ஒரு மந்திரத்தின் மூலம் உங்களுடைய துன்பங்கள் அனைத்தும் அகற்றப்பட்டுவிடும். மன்மனாபவ! தந்தை இதனைக் கூறுகிறார். பின்னர், ஓர் ஆசிரியராக, அவர் "மத்தியாஜிபவ" என்கிறார். அந்த ஒரேயொருவரே தந்தையும், ஆசிரியரும், குருவுமாவார். நீங்கள் மூன்றையும் நினைவு

செய்யும்போது உங்கள் ஸ்திதி மிகவும் மலர்ச்சியானதாக இருக்கும். தந்தை உங்களுக்குக் கற்பித்து, பின்னர், அந்த ஒருவரே உங்களைத் தன்னுடன் திரும்ப அழைத்தும் செல்கிறார். அத்தகைய தந்தையை நீங்கள் அதிகளவு நினைவு செய்ய வேண்டும். பக்தி மார்க்கத்தில் எவருக்கும் தந்தையைத் தெரியாது. அவர் கடவுள் என்றும், நாங்கள் அனைவரும் சகோதரர்கள் என்றுமே அவர்களுக்குத் தெரியும். தந்தையிடமிருந்து எதனைப் பெறவேண்டுமென்று, மக்களுக்குத் தெரியாது. ஒரேயொரு தந்தையே இருக்கின்றார் என்றும், நீங்கள் அனைவரும் அவருடைய குழந்தைகள் என்றும், அதனால் நீங்கள் அனைவரும் சகோதரர்கள் என்பதையும் இப்போது புரிந்துகொள்கிறீர்கள். இது ஓர் எல்லையற்ற விடயமாகும். ஓர் ஆசிரியராக அவர் குழந்தைகளாகிய உங்கள் அனைவருக்கும் கற்பிக்கிறார். பின்னர் அவர் உங்கள் அனைவரையும் உங்கள் கர்மக் கணக்குகளைத் தீர்த்துவிடச் செய்து, வீட்டிற்குத் திரும்ப அழைத்துச் செல்கிறார். நீங்கள் இந்த அழுக்கான உலகை விட்டுவிலகி, வீட்டிற்குத் திரும்பவேண்டும். பாபா உங்களைப் புதிய உலகிற்குச் செல்வதற்குத் தகுதியானவர்கள் ஆக்குகிறார். தகுதியானவர்கள் மாத்திரமே சத்திய யுகத்திற்குச் செல்வார்கள். அச்சா.

இனிமையிலும் இனிமையான, அன்புக்குரிய, எப்போதோ தொலைந்து இப்போது கண்டெடுக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு உங்கள் தாய், தந்தையாக இருக்கும் பாப்தாதாவின் அன்பும் நினைவுகளும் காலை வந்தனங்களும். ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளான உங்களுக்கு நமஸ்தே சொல்கிறார்.

தாரணைக்கான சாராம்சம்:

1. ஒரு நிலையானதும், மலர்ச்சியான ஸ்திதியைக் கொண்டிருப்பதற்கு பாபாவைத் தந்தை, ஆசிரியர், சற்குரு என்ற மூன்று வடிவங்களிலும் நினைவு செய்யுங்கள்: இங்கு உங்களைச் சந்தோஷ சம்ஸ்காரத்தினால் நிரப்புங்கள். உங்கள் ஆஸ்தியின் விழிப்புணர்வினால் உங்கள் முகம் சதா பிரகாசிக்கட்டும்.
2. ஸ்ரீமத்தைப் பின்பற்றுவதுடன், முழு உலகையும் மாற்றுகின்ற சேவையைச் செய்யுங்கள். ஐந்து விகாரங்களிலும் அகப்பட்டுக்கொண்டுள்ள அனைவரையும் விடுவியுங்கள். சுயத்தின் ஆதி தர்மத்தின் அறிமுகத்தை நீங்கள் கொடுக்கவேண்டும்.

ஆசீர்வாதம்: நீங்கள் எல்லோராலும் நேசிக்கப்படுவதுடன், எல்லோரின் மீதும் அன்பான பார்வையையும் உணர்வுகளையும் வைத்திருக்கும் ஒரு தேவதை ஆகுவீர்களாக.

மக்கள் தமது கனவுகளில் தேவதையைக் காணும்போது, அவர்கள் மிகுந்த சந்தோஷம் அடைகிறார்கள். தேவதை எல்லோராலும் நேசிக்கப்படுகிறார். ஒரு தேவதையின் அன்பு எல்லைக்குட்பட்டது அல்ல, ஆனால், எல்லையற்ற அன்பைக் கொண்டிருப்பவர் ஆவார். தன்னை நேசிப்பவர்களின் மீது மட்டும் அன்பு செலுத்துபவர் அல்ல, ஆனால் எல்லோரின் மீதும் அன்பு கொண்டவர். ஓர் ஆத்மா எத்தகையவராக இருந்தாலும், உங்களின் பார்வையும் உணர்வுகளும் அன்பானதாக இருக்க வேண்டும். இதுவே எல்லோர் மீதும் அன்புடையவர் எனப்படுகிறது. யாராவது உங்களை அவமதித்தாலோ அல்லது வெறுத்தாலோ, அவருக்கும் அன்பான மற்றும் உபகார

உணர்வுகள் மட்டுமே இருக்க வேண்டும். ஏனென்றால், அந்த ஆத்மா அந்த வேளையில் வேறொரு ஆதிக்கத்தின் கீழ் இருக்கிறார்.

சுலோகம்: சகல பேறுகளாலும் நிறைந்திருப்பவர்கள், சதா மலர்ச்சிநிறைந்தவர்களாகவும் சந்தோஷமாகவும் இருப்பார்கள். ஏனென்றால், அவர்களிடம் சந்தோஷ பாக்கியம் இருக்கும்.

**---ஓம் சாந்தி---**